## இரண்டாவது தேர்ச்சி :
## முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக வாழ்வர்

8

### 2.1. நீங்கள் என் அன்புப் பிள்ளைகள்



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். முட்டைக்குள் இருந்து குஞ்சு ஒன்று வெளிவருகின்றது. அது வாழ்ந்த இருளான அடைபட்ட உலகைவிட்டு வெளிச்சமான புதிய உலகை காண்கின்றது. புதியதொரு வாழ்வுக்குள் அது நுழைகின்றது, பிறக்கின்றது.

ஆம் திருமுழுக்கின் மூலம் நாமும் புதுப்பிறப்படைந்து புதிய வாழ்விற்குள் பிரவேசிக்கின்றோம். நாம் பெற்ற திருமுழுக்கு வாழ்வை அதாவது அருள் வாழ்வை நாம் வாழவேண்டும்.

இயேசு அவரைப் பார்த்து மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன் என்றார். நிக்கதேம் அவரை நோக்கி வயதான பின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும். அவர் மீண்டும் தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா என்று கேட்டார். இயேசு அவரைப் பார்த்து ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 3:3-5

திருமுழுக்கு பாவங்களைக்
கழுவுவதோடு புதுப்படைப்பாக எம்மை மாற்றுகிறது. திருமுழுக்கின்மூலம் கடவுளின் சுவீகாரப் பிள்ளையாகின்றோம். தூய ஆவியின் ஆலயமாகின்றோம். ஒரே ஆவியால் நாம் அனைவரும் திருமுழுக்குப் பெறுவதால் புதிய உடன்படிக்கையின் இறைமக்களாகின்றோம். எமக்குள்ளே எவ்வித வேறுபாடுகளுமில்லை. கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வே திருமுழுக்கு, திருச்சபை வழியாக எமக்கு மீட்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. இறைத்தந்தையின் சுவீகாரப் பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபையில் அங்கத்தவராகி அவரது குருத்துவத்திலும் பங்காளிகளாகிறோம்.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி
1265, 1267, 1277, 1279

## செயற்பாடு

- கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியின் மேற்கோளில் மேலே காட்டப்பட்டதற்கிணங்க திருமுழுக்கு மூலம் நாம் பெற்றுக்கொண்ட புது வாழ்வு பற்றி என்ன குறிப்பிடப்படுகின்றது என்பதை பயிற்சிக் கொப்பியில் எழுதுக.


திருமுழுக்கு வழியாக நாம் பெற்ற புது வாழ்வை வாழ்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். தீமையின் ஆதிக்கமும் பசாசின் ஆட்சியும் நிலவும் இவ்வுலக வாழ்விலிருந்து விடுபட்டு ஆவிக்குரிய வாழ்வைத் தேட வேண்டும். தூய ஆவியின் ஆலயங்களாகிய நாம் இறை அருளுக்காகத் தினமும் செபிக்க வேண்டும்.

கத்தோலிக்க மாணவர் என்ற வகையில் நல்ல எடுத்துக்காட்டான வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும். தூய வாழ்வுக்கு எம்மை அழைக்கும் கிறிஸ்து தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக எமக்கு உன்னதமான முன்மாதிரியாக உள்ளார். மனுக்குலத்தின் மட்டில் தமக்குள்ள எல்லையற்ற அன்பை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

சிறு குழந்தையாக இவ்வுலகில் பிறந்த நாம் திருமுழுக்கு வழியாக புது வாழ்வைப் பெற்றோம். சென்ம பாவத்திலிருந்து விடுதலை பெற்று கிறிஸ்துவின் மறையுடலில் உறுப்பினராகி தூய ஆவியின் வல்லமையை பெற்றுள்ளோம். தூயவர்களாக வாழ்வதற்குத் தேவையான ஆற்றலையும் வல்லமையையும் நிறைவாகப் பெறுகிறோம்.

கிறிஸ்துவின் உன்னதமான அன்பைப் பெற்றுள்ள நாம் பேறு பெற்றவர்கள். எனவே அவரைப் பின்பற்றி அவரது போதனைகளைப் பறைசாற்ற எம்மை அர்ப்பணிப்போம். தாழ்ச்சி, நேர்மை, மன்னிப்பு ஆகிய பண்புகளை வளர்த்து சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். எனவே, தூய ஆவி எம்மைப் பாதுகாத்து எமது வாழ்வை ஒளிர்விக்கிறார்.

## தூய ஆவியின் கொடைகள்




தூய ஆவியின் வரங்களினால் எமது வாழ்வு மாற்றமடைகின்றது. இறைத்தந்தையின் அன்பை பகிர்ந்து வாழ எமக்கு ஆற்றல் கிடைக்கிறது. தியாகம், பொறுமை, அர்ப்பணம், தாழ்ச்சி ஆகிய உயரிய பண்புகளை நாம் கொண்டிருப்பது மட்டுமல்ல, அவற்றையும் வெளிப்படுத்துகிறோம். இவ்வாறே பெற்றோர், ஆசிரியர், சகோதர சகோதரிகள், நண்பர்கள் வழியாகவும் இவ்வன்பை நாம் கண்டுணரலாம்.

திருமுழுக்கின் வழியாக தூய ஆவயின் வரங்களால் நிறைவடைந்துள்ளோம் எனவே நாம் இவ்வுலக நாட்டங்களைத் துறந்து தூய வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

## செயற்பாடு

. மிகச் சரியான பதிலின் கீழ் கோடிடவும்:

01. இயேசு திருமுழுக்கு பெற்ற இடம்
1. எருசலேம் 2. யோர்தான் நதி 3. செங்கடல் 4. கலிலேயா

02. யோவான் நற்செய்தியின்படி திருமுழுக்கு பெறுவதால் எமக்கு கிடைக்கும் வரம்.
1. இறையாட்சி 2. புதுவாழ்வு 3. மரியன்னை 4. ஒளி

03. ‘‘விமரிசை’’ என்பது
1. அருளடையாளம் 2. பத்து கற்பனை
3. தூய ஆவியின் கொடை 4. தூய ஆவியின் பலன்கள்

04. திருமுழுக்கு பெற்ற பிள்ளையிடம் இருக்க வேண்டிய பண்பு
1. தியாக வாழ்வு 2. போட்டி 3. சுயநலம் 4. தற்பெருமை

05. தியாக வாழ்வின் அர்த்தம்
1. பகிர்தல் 2. பாஸ்காப் பலி 3. தாழ்ச்சி 4. பாதம் கழுவுதல்

. திருமுழுக்கின் மூலம் சமூக வாழ்வில் எனக்கிருக்கும் கடமைகளும் பொறுப்புகளும்.

1.
.................................................................................................................................


2.
.................................................................................................................................

3.
.................................................................................................................................

4.
.................................................................................................................................

5.
.................................................................................................................................

எம்மை வாழ்வுக்கு அழைத்த இறைவன் நம் சார்பாக இருக்கிறார் என்பதை பின்வரும் பாடல் தெளிவுபடுத்துகிறது.



**இறைவன் நம்மை அன்பு செய்கிறார்**

**எந்த நிலையில் நான் இருந்த போதிலும்**

**இறைவன் நம்மை அன்பு செய்கிறார்**

**I**

**மனிதத் தேவைகள் இறைவன் அறிகின்றார்**

**மற்றும் பெயர் சொல்லி அவரே அழைக்கின்றார்**

**இனிய அன்பை வாரி வழங்கி திளைக்கச் செய்கின்றார்**

**எல்லோருக்கும் அதனை பகிர்ந்து அளிக்கச் செய்கின்றார்**

**II**

**மனித மாண்புகள் இறைவன் அறிகின்றார்**

**மனத்தின் கவலைகள் நீக்கி மகிழ்ச்சி தருகின்றார்**

**தனிமை உணர்வை நீக்கி அவர்தம் அன்பு உறவிலே நிலைக்கச் செய்கிறார்**

## செயற்பாடு :-

1. திருமுழுக்கு வழியாக இறைபிள்ளையாகிய என்னிடம் இருக்க வேண்டிய மூன்று பண்புகளை மேலுள்ள பாடலிருந்து எழுதவும்.
2. இப்பாடலில் குறிப்பிடப்படாத, ஆனால் உம்மிடம் இருக்க வேண்டிய பண்புகளைப் பட்டியல்படுத்துக.
3. ‘‘திருமுழுக்கு அழைப்பின் வழியாக என் வாழ்வைப் புதுப்பிப்பேன்’’ என்ற தலைப்பில் 10 வரிகளில் சிறிய கட்டுரை எழுதுக.

**வாழ்க்கைக்கு**

திருமுழுக்கு அழைப்புப் பெற்றுள்ளோம்.
தூய ஆவியினால் நிறைவடைந்துள்ளோம்.
உலக நாட்டங்களை விலக்குவோம்.
இறையரசின் விழுமியங்களை வாழ்வோம்.
தூயவர்களாக புது வாழ்வில் நுழைவோம்.

காண்க: தி.ப.3:19-20